# மணிக்கவிகள்

கவிஞர் வி. கந்தவனம்

மணிவிழாக் குழு
ரொறன்ரோ, ஒன்ராறியோ
கனடா

# மணிக்கவிகள்

கவிஞர் வி. கந்தவனம்

மணிவிழாக் குழு
றொறன்ரோ, ஒன்ராறியோ
கனடா

முதற் பதிப்பு: அக்டோபர், 1994
மணிவிழாக் குழு வெளியீடு - 4

Manikkavikal
Author: V. Kandavanam
First published: October, 1994
By: Diamond Jubilee committee
Toronto, Ontario, Canada.

# பொருளடக்கம்

1. பதிப்புரை

2. ஆசியுரை

3. மதிப்புரை

4. மணிக்கவிகள்

# பதிப்புரை

கவிஞர் - கட்டுரையாளர் - பேச்சாளர் - இலக்கியஞானி எனப் பல பரிமாணங்களில் தமது ஆளுமையைப் பரப்பிவரும் பெரியார் கவின்மிகு கவிஞர் வி. கந்தவனம் அவர்களின் மணிவிழா வெளியீட்டு வரிசையில் நான்காவதாக வெளிவரும் மணிக்கவிகள் என்ற இச் சிறு நூலை உங்கள் கரங்களுக்குச் சமர்ப்பிப்பதில் மகிழ்ச்சிப் பெருமிதம் ஏற்படுகின்றது.

அர்த்தமுள்ள அறுபது ஆண்டுகள் நிறைவாக இங்கே அர்த்தமுள்ள அறுபது கவிமணிகள் இதயத்தை நிறைக்கின்றன. உருவகச் சிறப்பில் மாத்திரை போன்ற இவை உள்ளடக்கத்தில் காத்திரம் கொண்டவை.

வாழ்வியலை வார்த்தைகளால் வனப்புடன் வடித்துவரும் கவிஞர் அவர்களது அறுபது ஆண்டு காலச் சரித்திரம் ஒரு தனிமனிதனின் சரித்திரம் மட்டுமல்ல.
- அது தமிழ் மக்களின் சரித்திரம்

கடந்த காலத்தைத் திருப்பிப் பார்க்கும் பொழுது எழுத்தில் விபரிக்க முடியாத பெருமிதமும் மனநிறைவும் மேலிடுகின்றன. எதிர் காலத்தை எண்ணிப் பார்க்கும் பொழுது வார்த்தைகளில் வர்ணிக்க முடியாத உணர்வும் உணர்ச்சியும் பொங்குகின்றன.

எந்த ஒரு பொருளை எடுத்துக் கொண்டாலும் ஒரு புதிய கோணத்திலிருந்து அதனைப் பார்த்துக் கருத்துக் கூறுவார் - சிறப்பாகக் கூறுவார் - தனித்துவத்துடன் கூறுவார் - எங்கள் கந்தவனம். காலம் அவர் முகத்தில் கையெழுத்திடுவதில்லை. அதனால்

என்றும் இளமையோடு இருக்கும் அவர் காலத்தின் முகத்தில் முத்திரை பதிக்கின்றார்.

பன்முகப்படுத்தப்பட்ட பேராற்றல்களைத் தன்னகத்தே கொண்டியங்கும் இப் பெரியவரால் எழுதப்பட்ட இந்த மணிக்கவிகள் 1993ல் 'தாயகம்' சஞ்சிகையில் வாராவாரம் மணியாக மிளிர்ந்து கொண்டிருந்தபோதே பலரும் ஒரே முகமாகப் பாராட்டினர்.

இச் சிறு நூலை அழகுற அச்சமைத்து வடிவமைத்து வெளியிடுவதில் பெரும் பங்காற்றிய தமிழ் உணர்வும், இலக்கிய தாகமும் மிக்கத் துடிப்பான இளைஞர் துரைசிங்கம் ஈஸ்வரகுமார் நன்றிக்குரியவர்.

ரொறன்ரோவில் உள்ள "கவிஞர் கந்தவனம் மணி விழாக் குழு", கவிஞர் அவர்களது பெருகிவரும் இலக்கியச் சிருஷ்டிகளுக்கு நூல் வடிவம் கொடுத்துப் பிரசுரிக்கும் பாரிய பணியினை உவகையுடன், ஏற்று முனைப்புடன் செயற்பட்டு வருகின்றது. கவிநாயகர் கந்தவனம், கவிஞர் கந்தவனம் மணி விழாப் பாமலர், இலக்கிய உலகம் ஆகிய மூன்று நூல்களை இது வரை வெளியிட்டுருந்த மணிவிழாக் குழு இப்பொழுது தருவதுதான்-

கவிஞரின் மணிக்கவிகள்!

-இதோ!

-எஸ். ஜெகதீசன்.<br>
செயலாளர்<br>
மணிவிழாக் குழு.<br>
ரொறன்ரோ.<br>
28-10-1994

சிவாகம ஞானபானு
ஸ்ரீ சிவஞானச்செல்வக் குருக்கள்
வழங்கிய

# ஆசியுரை

உ
சிவமயம்

கந்தம் வருநற் கவிதை வனமாம்
கந்தவனம் தந்த கவிப்பூங் கொத்து
கவிஞர் கந்த வனத்தின் கவின்கவி
புவியில் உள்ளவர் எளிதில் புரியும்
மணிக்கவி மாண்பு மனதைத் தொடுமே.
தனிச்சிறப் புள்ள தகைமை கண்டுளோம்
இசைத்தமிழ் அடிகளில் இன்னுப தேசம்
பகுத்தறி வற்றார் பெண்களைப் பழிக்கும்
விதத்தைக் கூறுவர் வீரம் போற்றுவர்
உள்ளத் தூய்மையை உண்டுபண் ணாவெறும்
வெள்ளைக் கல்வி வேண்டாம் என்கிறார்.
அரசியல் பிழைத்தது ஆக்கம் அழிந்தது
சாகும் வரைநீ தமிழையே பேசு
பதவியில் இருக்கையில் பவிசடை யாதே
சொந்தப் பிரச்சனை துடைக்கத் தெரிந்துகொள்
நேரிய கொள்கையும் கூரிய புத்தியும்
பாரினில் எவர்க்குப் பயன்தரும் என்பார்
புரட்சிப் பேச்சுப் புளுகுகள் வேண்டாம்
இரவல் வரவை இனிதென் றிராதே
சொந்த நாட்டுச் சுகம்போல் ஒன்றிலை
வந்த வழியை மறந்து விடாதே

நான் என்னும் செருக்கு நல்லவர்க் கில்லை
ஆன்ற பெரியோர் அருந்திறன் அதுவே
தந்தையைக் கொன்று தனிவீடமைக்கும்
சிந்தனை வேண்டாம் சீரியோ னாயிரு
பக்குவ முடையார் பண்புகள் போற்று
உத்தமனா யுன்னை உலகோர் மதிக்கத்
தக்கவ னாகித் தகைவுடன் வாழ்கென
மணிக்கவி யாலே மணிமொழி பாடிய
இணக்கம் கண்டோம் இறும்பூ துற்றோம்
இசைத்தமி ழாலே இனியன கூறும்
தனிச்சிறப் புள்ள தகைமை போற்றுதும்
சிந்தை தெளியச் சீரிய பாடும்
கந்த வனமே கவிஞரே வாழ்க!
நுங்கள் கவிதைகள் நூல்வடி வாகி
எங்கும் பரந்து இயல்புடைத் தாகி
வந்திட வாழ்க வி. கந்தவனமே
வேழ முகத்து விநாயகர் அருளால்
பாரியும் நீரும் பல்லாண்டு வாழ்க!

-சிவஞானச்செல்வக் குருக்கள்

# மதிப்புரை

## மணிக்கவிகள்

தலையங்கம் "மணிக்கவிகள்". தொடர்வன சில குறட்பாக்கள். இவை பொறித்த வெள்ளைத்தாள்கள் என் கண்களிற் பட்டன.

குறளுக்கு மணிக்கவிகள் என்றொரு பெயரும் வழக்கிலிருக்கிறதோ! இதைக்கூட அறிந்தே-னில்லையே இத்தனை நாளும்! எதற்கும் வாசித்துப் பார்ப்போமே. மணிக்கவிகளைக் கையில் எடுத்தேன். பாக்கள் ஊடே கண்கள் ஓடின - இது என்ன?

"அகர முதல்" என்பதைக் காணோம் "ஆதிபகவனையும்" காணோம். இது வேறொன்று - கருத்தூன்றி இப்போழுது வாசிக்கிறேன்.

"பிறந்தேன் நடந்தேன் பெரிதும் வளர்ந்தேன்" சுவையாக இருக்கிறதே - தொடர்கிறேன். "அறிந்தேனில்லை ஆதிப்பொருளை" - நல்ல கவிதையாயிருக்கிறதே! என் செவிகளுக்குக் கேட்ப உரத்து நயத்தோடு, உணர்வோடு பாடுகிறேன்.

"பிறந்தேன் நடந்தேன் பெரிதும் வளர்ந்தேன்" அறிந்தேனில்லை ஆதிப் பொருளை" - மணிக்கவிதை.

இந்த முதற் பாட்டிலேயே கண்கள் தரித்துவிட்டன. கருத்தும் இதைவிட்டு அகல மறுக்கிறது. உண்மையைக் கண்டுவிட்ட மெஞ் ஞானி

போல் உள்ளம் ஒளிமயமாகி விரிந்து வியாபித்துத் தெளிகிறது.

"அறிந்தேனில்லை ஆதிப்பொருளை"
ஆதிப்பொருள், ஆதிப்பொருள் - மீண்டும் மீண்டும் சொல்லிப் பார்க்கிறேன். சுவைக்கிறது, இனிக்கிறது, சொல்லத் சொல்லத் தித்திக்கிறது.

தமிழ் அமுதக் கடலிலே 2000 ஆண்டுகளுக்கு மேல் ஆடிக்கிடந்த ஆதிபகவன் இரண்டாகி நின்று ஒன்றாகிக் கலந்து பெற்றெடுத்த ஆணிமுத்தல்லவா இந்த "ஆதிப் பொருள்". இலக்கியக் கடலெல்லாம் சுழியோடி வந்த "சு'கந்தர்" கவிஞர் கந்தவனம் அறிவுக் கடலைக் கடைந்தெடுத்த அமுதம் - அழகான முத்து "ஆதிப் பொருள்."

அகர முதலைக் கண்டு, அறிவு வனங்களூடாக நடந்த கந்தவனம் தமிழ்க் கடலில் புகுந்து கண்டெடுத்த முத்து இந்த மணிக்கவிதைகளுள் முதற் கவிதை தரும் "ஆதிப் பொருள்" எனும் ஆணிமுத்து. ஆதிப் பொருளைப் பிறவிக்கடலைக் கடந்து நீந்திக் கண்டு பிடித்துக் கையில் வைத்துக் கொண்டு "அறிந்தேனில்லை ஆதிப்பொருளை" என ஏன் ஏங்குகிறார்? எமக்காக ஏங்கும் ஞானி பிறந்த நோக்கு என்ன? கற்றதனாலாய பயன் என்ன? வளர்ச்சி என்றால் என்ன? ஏன் வளருகிறாய்? எங்கே போகிறாய்? மனிதா உன் குறிக்கோளை, நோக்கை நோக்கி நட என எம்மையும் ஆற்றுப்படுத்தும் நக்கீர தேவன் - கந்தவனம் என வந்து உதித்துள்ளானோ - குரு உருவாய் வந்த கந்தனோ.

உள்ளதாம் பொருள்தேடி உணர்ந்தும் வேத சாரம் மணிக்கவிதை கள்ளமற்ற முனிவர்கள் உலகுய்யக்

கூறும் கருணை வாசகம் மணிக்கவிஞன் கொள்ளை இன்பம் குலவு கவிதை கூறும் பாவலன் உள்ளத்தில் - கவிதைக் கன்னி கலைமகள் நடமாடுகிறாள். அவள் கிண்கிணி நாதமாக மணிக்கவிதை கேட்கிறது. மீண்டும் மீண்டம் சொல்லுங்கள், "பிறந்தேன், நடந்தேன் பெரிதும் வளர்ந்தேன் அறிந்தேனில்லை ஆதிப்பொருளை."

இது ஓர் தாரக மந்திரம். நடந்தும், இருந்தும், கிடந்தும் இதையே கூறுங்கள். இதையே தேடுங்கள். பிறவிப் பெரும் பயனை இவ்வளவு இனிமையாக நயமாக, சுவையாக, புதுமையாகச் சொல்ல வல்லவன் கந்தவனம்தான். பிறந்தோம் நடந்தோம் எத்தனை தூரம்? எத்தனை காலம்?

வளர்ந்தோம் - சுமையாகி கொப்பாகி, காட்டகத்தே நிற்கும் பெரிய மரம் போல, கல்லுப் பெரிதாய் வளர்ந்து மலையானதுபோல் பெரிதும் பெரிதும் வளர்ந்தோம். பயனென்ன? ஒன்றாய், பலவாய் உயிருக்குயிரான ஆதிப்பொருளை அறிந்தோமா? பாடுங்கள் ஒவ்வொரு கவிதையையும், ஒவ்வொன்றாகப் படியுங்கள். உலகில் அறிவு மிக ஹாஸ்யமாக - புன்சிரிப்போடு பெறலாம். பற்பல வித அறிவுபெறலாம். வையத்துள் வாழ அது மிகமிக அவசியம். தெய்வத்தை அறியவும் தருகிறது மணிக்கவிதை.

அறிந்தோமில்லை என்று தேடத்தேட அறிவாய் வரும் தெய்வம் ஆதிப்பொருள். அதை எமக்குத் தருகிறார் 60 குறப்பாட்களில். இவ்விதம் ஒவ்வொரு பாடலுக்கும் பொருள் விளக்கம் கூறலாம். இவை திருமூல மந்திரம்போல் 3000 ஆண்டுக்கொன்றாய் மலர இறைவனைப் பிரார்த்தித்து கவிஞனை வாழ்த்துவோம் வாரீர்.

-திருமதி புவனேஸ்வரி சச்சிதானந்தம்

# மணிக்கவிகள்

1. பிறந்தேன் நடந்தேன் பெரிதும் வளர்ந்தேன்
அறிந்தே னல்லேன் ஆதிப் பொருளை.

2. பரம்பொருள் பற்றிப் பக்குவப் பட்டார்
தரும்பொருள் முற்றும் தருமத் தரசு.

3. அறவழி போற்றி ஆற்றும் கருமம்
மறைவது மில்லை மாள்வது மில்லை.

4. உள்ளப் பக்குவ உயர்வினை நல்கா
வெள்ளைக் கல்வி வேண்டுவ தார்க்கு.

5. அரசியல் இன்று பொதுசன வாழ்விற்
கரிசனை யில்லாக் கலையா யிற்று.

6. உள்ளத் தூய்மையும் உயர்ந்த நோக்கும்
வள்ளல் தன்மையும் வாய்ந்தவர் தலைவர்.

7. வீரம் இல்லா வெறியர் செயல்கள்
சாரம் இல்லாச் சண்டையில் முடியும்.

8. பார்மகள் இழந்தாள் பகுத்தறி வற்ற
போர்களின் விளைவால் பூவும் பொட்டும்.

9. பழகப் பழகப் பால்புளி யாதாம்
அழகுள் ளத்தில் அன்பழி யாதாம்.

10. அனுபவ அறிவே ஆன்ற அறிவு
மனமதன் உயர்வே மாண்ட நிறைவு.

11. காசைக் கொட்டியும் காணாக் காரியம்
மாசில் மனத்தவர் வாழ்த்தால் பலிக்கும்.

12. விரிவெளி யாண்டு வீரம் பேசிய
அரசியல் தானும் ஆட்டம் காணும்.

13. பதவியில் உயர்ந்தால் பாடுவர் வாழ்த்துப்
பதவியை இழந்தால் ஓடுவர் பார்த்து.

14. ஏகும் தேசம் எதுவா னாலும்
சாகும் வரையும் தமிழைப் பேசு.

15. ஒருநாய் குரைக்கப் பலநாய் குரைக்கும்
ஒருதமிழ்க் குரலுக் கொருவரும் உதவார்.

16. வெட்ட வெட்டத் தழைக்கும் புல்லு
குட்டக் குட்டக் குனிவர் புல்லர்.

17. சந்திப் பிரச்சனை தகர்க்கும் பெரியார்
சொந்தப் பிரச்சனை துடைக்கத் தெரியார்.

18. ஆழப் பழகு அமிழ்ந்துபோ காதே
வாழப் பழகு வழுக்கிவீ ழாதே.

19. சூரிய புத்தி காரிய சித்தி
நேரிய கொள்கைக் காரரின் சொற்கேள்.

20. மாலை மதிப்புகள் வாழ்த்துக ளுக்கு
வாலை யாட்டலும் மயங்கலும் மடமை.

21. நேரம் பெரிது நேரத்தை விட்டார்
சேரும் பதவியைச் சிறப்பினை விட்டார்.

22. அள்ளிக் கொடுக்க ஆசைதான் ஆனால்
உள்ளம் இல்லை ஓடேந்தப் பின்னால்.

23. தந்தையைக் கொன்று தனிவீ டமைக்கும்
சிந்தனை சிறிதும் எந்தனுக் கில்லை.

24. புவிமகள் அழகில் பூரித்து நிற்பார்
கவலைகள் அற்றார் கயமையும் அற்றார்.

25. கற்றவர் கருத்தைக் காதில் விழுத்து
மற்றவர் சொல்லை வாதில் கொளுத்து.

26. பாய்ந்தால் பாயும் பதுங்கிய பூனை
சாய்ந்தால் சாயும் சறுக்கிய யானை.

27. பயிற்சி செய்தால் பழக்கம் ஊன்றும்
முயற்சி செய்தால் முடிக்கத் தோன்றும்.

28. 'ஒன்று பட்டால் உண்டு வாழ்வு'
என்ற வாழ்வை இன்னும் காணோம்.

29. பிரச்சனை தீர்க்கும் பெருந்திற னில்லாப்
புரட்சிப் பேச்சுப் புளுகர் ஒழிக.

30. சொல்லும் திறனும் சொல்வதைச் செய்து
வெல்லும் திறனும் தலைமைக்கு வேண்டும்.

31. புதுமைக்குத் தானோ புகழுக்கும் போட்டிக்கும்
பதவிக்கும் பதுக்கவும் ஒதுக்கவும் வெளுப்பார்.

32. அலுவல் முடிக்க அடிக்கடி வருவார்
அலுவல் முடிந்தபின் அடிக்கவும் வருவார்.

33. சொல்லு நீரில் லாமல் துவண்ட
நெல்லைப் பார்த்துப் புல்லும் சிரிக்கும்.

34. முன்னாள் இந்நாள் முழுதும் கற்றான்
தன்னைப் பற்றிய சரிதம் தெரியார்

35. வந்த வழியை மறவா திருந்தால்
எந்தப் பதவியும் பறிபோ காதாம்.

36. அல்லும் பகலும் அயரா துழைத்தல்
வல்லார்க் குரிய மாறா வியல்பாம்.

37. நானே சொன்னேன் நானே செய்தேன்
நானே என்பார் நாளை நில்லார்.

38. அப்பன் அம்மை அண்ணன் ஆசான்
அப்பால் அரசுக் கடிமை சுதந்திரம்.

39. சர்க்கரை போன்று சார்ந்தே இனிக்கும்
தக்கநல் லுறவும் சலநோ யாகலாம்.

40. ஆன்ற முன்னோர் அருந்திறன் போற்றிச்
சான்று பகரின் சந்ததி ஓங்கும்.

41. பக்குவப் பட்டார் பண்புகள் பற்றின்
சிக்கல்கள் தீரும் சிறப்புகள் சேரும்.

42. நல்லவை மட்டும் மனதில் நடுவேன்
அல்லவை யாவும் அன்றே விடுவேன்.

43. படிபடி யென்று படித்துக் கிழிப்பார்
அடிபிடிப் படுவார் அனைத்தும் அழிப்பார்.

44. சேற்றில் பிறந்தான் சேற்றில் வளர்ந்தான்
நாற்றம் அறியான் மாற்றம் விரும்பான்.

45. ஊறு காய்க்கு நாவூ றல்போல்
ஊறும் நட்புக் குள்ளம் ஊறும்.

46. பற்றிலன் என்பார் பச்சைப் பொய்யர்
பற்றிலர் எவரும் பாரினில் இல்லை.

47. வறுமையும் நீங்கிப் பொறுமையும் ஓங்கின்
குறைவற வுலகை அறமுறை தாங்கும்.

48. காதலுக் குரிய கண்ணினை யொத்த
மாதருக் குரிமை மறுப்பவர் மடையர்.

49. காதல் காதல் காதல் போயின்
சாதல் மடமை தாரணி பெரிதே.

50. ஆயிரம் பேரின் அறிவுரைக் கலைவார்
சாயம் கழன்று சந்தியில் நிற்பார்.

51. சூழலைப் பேணாச் சுதந்திரம் உலகில்
வாழினும் ஒன்றே தாழினும் ஒன்றே.

52. பட்டும் கெட்டும் பாடம் படியார்
சொட்டும் சுரணை இல்லாக் கடையர்.

53. மற்றவர் வாழ்வை வருத்தி மகிழ்ந்து
வெற்றிகள் ஈட்டும் விரர்கள் வீழ்வர்.

54. தன்னை அறியான் தமிழையும் அறியான்
சன்னதம் வறண்ட தரைவிதை யாகும்.

55. சுத்த மில்லா மனத்தவர் தொடரும்
பத்தி மார்க்கம் பயன்விளை யாது.

56. தருமக் கடவுள் தரிசனம் பெற்றார்
உரிமை உடைமை உணர்வுக ளற்றார்.

57. இரவலைப் புதுமை எனக்கொண் டாடும்
மருளரின் வாழ்வில் வளர்ச்சியொன் றில்லை.

58. எந்த நாட்டின் இந்திர வாழ்வும்
சொந்த நாட்டுச் சுகத்தினுக் கொவ்வா.

59. சீதனம் வாங்கிச் செய்யும் திருமணம்
காதலின் அருமை காணா வெறுமணம்.

60. இன்னிசைக் கிளகார் இழிந்தவை செய்வார்
அன்னவர் உறவை அகற்றுவர் உய்வார்.

## கவிஞர் வி. கந்தவனத்தின் பிற ஆக்கங்கள்

(1) 1½ ரூபாய்
(2) சிட்டுக் குருவி (கூட்டுப் படைப்பு)
(3) இலக்கிய உலகம்
(4) ஏனிந்தப் பெருமூச்சு?
(5) கூனியின் சாதனை
(6) கீரிமலையினிலே!
(7) முறிகண்டிப் பத்து
(8) லுணாவிலூர்
(9) நல்லூர் நாற்பது
(10) பரீட்சையிற் சித்தியடைவது எப்படி?
(11) உய்யும் வழி
(12) இலங்கையில் ஆசிரியத்தொழில்
(13) பாடு மனமே!
(14) குரும்பசிட்டி விநாயகர் பத்து
(15) கவியரங்கில் கந்தவனம்
(16) புன்னையம் பதிகம்
(17) வித்தியானந்த மாலை (தொகுப்பு)
(18) பூச்சரம் (தொகுப்பு)
(19) Hail, The Tamil Tigers!
(20) விநாயகப்பா
(21) ஒன்று - பட்டால்